# சென்னை பல்கலை. தடகளம்: எம்.ஓ.பி., லயோலா சாம்பியன்

**சென்னை, அக்.26:** சென்னை பல்கலைக்கழக உடற்கல்வி துறை சார்பில் நடைபெற்ற ஏ.எல்.முதலியார் பொன் விழா நினைவு தடகளப் போட்டியின் மகளிர் பிரிவில் சென்னை எம்.ஓ.பி. வைஷ்ணவ மகளிர் கல்லூரி அணியும், ஆடவர் பிரிவில் சென்னை லயோலா கல்லூரி அணியும் ஒட்டு மொத்த சாம்பியன் பட்டம் வென்றன.

சென்னை நேரு மைதானத்தில் மூன்று நாள்கள் நடைபெற்ற இந்தப் போட்டியின் மகளிர் பிரிவில் எம்.ஓ.பி.வைஷ்ணவ மகளிர் கல்லூரி அணி 14 தங்கம், 10 வெள்ளி, 7 வெண்கலம் என மொத்தம் 31 பதக்கங்களுடன் முதலிடத்தைப் பிடித்தது.

ஆடவர் பிரிவில் லயோலா கல்லூரி அணி 13 தங்கம், 6 வெள்ளி, 4 வெண்கலம் என மொத்தம் 23 பதக்கங்களுடன் முதலிடத்தைப் பிடித்தது.

ஆடவர் தனிநபர் சாம்பியன் பட்டத்தை மாநிலக் கல்லூரி மாணவர் விஷ்ணு தட்டிச் சென்றார். அவர் 1,061 புள்ளிகளை கைப்பற்றினார். மகளிர் தனிநபர் சாம்பியன் பட்டத்தை எம்.ஓ.பி.வைஷ்ணவ கல்லூரி மாணவி கனிமொழி தட்டிச் சென்றார். அவர் 1,055 புள்ளிகளைப் பெற்றார்.

Dinamani (27.10.17)